**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை – திருமதி பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.**
திருவள்ளுராண்டு 2056, விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 02–ம் நாள்
2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16ஆம் நாள் திங்கட்கிழமை
**CNR.No.TNMY03-000429-2025**
**அசல் வழக்கு எண்.109/2025**

பாரத ஸ்டேட் வங்கி, மயிலாடுதுறை அதன்
துணை மேலாளர் மூலமாக ... வாதி

/எதிர்/

1.D. அஜீத்,
2.D.துரைசாமி. ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு வாதிக்காக வழக்கறிஞர் திரு.J.பாரி, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்ட நிலையில் அவர்களை நீதிமன்றத்தில் அழைக்கும் போது யாரும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், 06.03.2026–ம் தேதி அன்று வாதி தரப்பு சாட்சியம் விசாரிக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்தபோது, வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து, இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.4.33.227/–யும், அதற்குரிய பின் வட்டியையும், செலவுத் தொகையும் கொடுக்க உத்தரவிட கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

பிரதிவாதிகள், வாதி வங்கியில் கடந்த 26.03.2015 அன்று கல்விக்கடன் தொகையாக ரூ.1,62,558/– கடனாக பெற்றுள்ளார்கள். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அன்றைய தினமே கடன் தொகையை 13.90% வட்டியுடன் சேர்த்து திருப்பி செலுத்துவதாக உறுதிகூறினார்கள். மேற்படி கடனுக்கு அதே தேதியில் வங்கியின் நிபந்தனைக்கு உட்படுவதாக உடன்படிக்கை எழுதிக்கொடுத்துள்ளார்கள். வாதி பலமுறை கடன் தொகையை திரும்ப செலுத்த கேட்டும் பிரதிவாதிகள் செலுத்தவில்லை. கடந்த 02.04.2025 முடிய 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கு கடனின் பட்டியலின்படி மொத்தம் ரூ.4.33.227/– பாக்கி உள்ளது. ஆகையால் தாவா தொகையும் அதற்கு பின் வட்டியையும், செலவுத்தொகையையும் பிராதுபடி வாதி

வங்கிக்கு பிரதிவாதிகள் வழங்கிட உத்தரவு பிறப்பிக்க வேண்டி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் ஆஜராகாததாலும் தோன்றாதரப்பினராக கருதப்படுகிறார்கள். வாதி தரப்பில் வா.சா. 1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>4. இவ்வழக்கில் தீர்பு காண வேண்டிய பிரச்சனைகள்:–</u>**

வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>5. தீர்வு:–</u>**

வாதி வங்கியின் துணை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் 27.08.2014 தேதியிட்ட Loan Application executed by defendants அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 26.03.2015 தேதியிட்ட Agreement for Term Loan under education loan scheme அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 26.03.2015 தேதியிட்ட Arrangement letter Term Loan under Education Loan Schemes அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 13.02.2018 தேதியிட்ட Revival Letter executed by defendants அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 07.01.2021 தேதியிட்ட Revival Letter executed by defendants அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 04.12.2023 தேதியிட்ட Revival Letter executed by defendants அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 02.04.2025 தேதியிட்ட Loan Account Statement அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 21.08.2024 தேதியிட்ட Legal Notice அசல் வா.சா.ஆ.8 ஆகவும், 26.08.2024 தேதியிட்ட Acknowledgment Card அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 04.05.2024 தேதியிட்ட Manager Posting order அசல் வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. வாதி வங்கியின் துணை மேலாளரான வா.சா.1 தாவா சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாதி தரப்பு சான்றாவணங்களின் அடிப்படையில் வாதி வங்கியில் 1, 2 ம் பிரதிவாதிகள் ரூ.1,62,558/–க்கு கல்விக்கடன் பெற்றுக்கொண்டு அதற்கு கடனுறுதி சீட்டும், கடன் உடன்படிக்கையும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பதும், மேலும், வாதி வங்கி கணக்குப்பட்டியல் வா.சா.ஆ.7ல் இருந்து பிரதிவாதிகள் வாங்கிய கடனின் அடிப்படையில் தாவா தொகை ரூ. 4,33,227/– வாதிக்கு சேர வேண்டியுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. எனவே, பிரதிவாதிகள் தாவா கடன்களின் படி தாவா தொகையை செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது.

7. இந்நிலையில். பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்களாக இருப்பதால் மறுதரப்பில்லா வாதியின் வழக்கு அவர் முன்னிலைப்படுத்திய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின்படி நிரூபிக்கப்பட்டுள்ளதால் வாதியின் வழக்கு கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், வாதி தாவாவில் கோரும், பரிகாரங்கள் பெற தகுதியானவர் என்று இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

8.**இறுதியாக,**

வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகள் வாதிக்கு தாவா தொகையான ரூ. 4,33,227/-யும் மற்றும் அந்த கடனின் அசல் தொகையான ரூ.1,62,558/-க்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதிவரை 9 சதவீதம் வட்டியும், தீர்ப்புத்தேதியிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 6 சதவீத வட்டியும் சேர்த்து கணக்கிட்டு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் படித்து சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று (16.03.2026) அவையறிய பகரப்பட்டது.

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.03.16 19:27:06 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

**<u>பின் இணைப்பு:-</u>**

**<u>வாதி தரப்பு சாட்சி:-</u>**

வா.சா. 1. ரவீந்திரன் (வாதி வங்கியின் துணை மேலாளர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 27.08.2014 | Loan Application executed by Defendants | அசல் |
| வா.சா.ஆ. 2 | 26.03.2015 | Agreement for Term Loan under education Loan Schemes. | அசல் |
| வா.சா.ஆ. 3 | 26.03.2015 | Arrangement Letter for Term Loan under education Loan Schemes. | அசல் |
| வா.சா.ஆ. 4 | 13.02.2018 | Revival letter executed by defendants. | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 5 | 07.01.2021 | Revivel Letter executed by defendants. | அசல் |
| வா.சா.ஆ. 6 | 04.12.2023 | Revivel Letter executed by defendants. | அசல் |
| வா.சா.ஆ. 7 | 02.04.2025 | Loan Account statement. | அசல் |
| வா.சா.ஆ. 8 | 21.08.2024 | Legal Notice. | அசல் |
| வா.சா.ஆ. 9 | 26.08.2024 | Acknowledgement card. | அசல் |
| வா.சா.ஆ. 10 | 04.05.2024 | Manager posting order. | நகல் |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.16 19:27:39 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

*முதன்மை சார்பு நீதிமன்றம்,*
*மயிலாடுதுறை.*
*நேரிய/வரைவு உத்தரவு*
*ஓ.எஸ்.109/2025*
*நாள்.16.03.2026.*